2011 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

பதினான்காவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடர் நிறைவுபெறும் இந்நன்னாளில் இக்கூட்டத் தொடரில் பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் குறித்து அவைக்கு அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று!
என்று சொன்னாள் அவ்வைப் பிராட்டி.

பிற்பகல் 4-55

நல்லவர்களைக் கண்குளிரக் காண்பதுவும் நன்மை தரும், நல்லவர்களின் உரைகளைச் செவிமகிழக் கேட்பதுவும் நன்மை தரும். நல்லவர்களின் இனிய குணங்களை வாயாரப் புகழ்வதும் நன்மை தரும். இத்தகைய குணங்களைக் கொண்டவர்களோடு சேர்ந்திருப்பதுவும் நன்மையே தரும் என்பதுதான் அவ்வை சொன்ன அந்த மூதுரையின் அழகிய அர்த்தம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்த இலக்கணத்திற்கு ஏற்றாற்போல், தமிழகத்தின் பதினான்காவது சட்டமன்றப் பேரவை, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் தலைமையில் நல்லவர்களைக் கொண்டிருக்கிறது. நல்லவர்களின் உரைகளும் இங்கே ஒலித்தன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

2011 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 ஆம் நாள் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின்னர் அமைந்த பதினான்காவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரின் முதல் கூட்டம் 23-5-2011 முதல் 10-6-2011 வரை நடைபெற்றது. இக்கூட்டத் தொடரின் இரண்டாவது கூட்டம் 4-8-2011 முதல் இன்று (14-9-2011) வரையிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இக்கூட்டத் தொடரின்போது பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

[பேரவைத் தலைவர்] [2011 செப்டம்பர் 14

23-5-2011 அன்று உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம்/உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். 27-5-2011 அன்று பேரவைத் தலைவரும், துணைத் தலைவரும் போட்டியின்றி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பேரவை கூடிய மொத்த நாட்கள் (ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட)	—	33
தற்போது மணி 4-56, இதுவரை அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம்	—	133 மணி 10 நிமிடம்

30-8-2011 அன்று பேரவை காலை 10-00 மணிக்குக் கூடி, உணவு இடைவேளைகூட இல்லாமல் மாலை 6-36 மணி வரை அதாவது 8 மணி 36 நிமிட நேரம் தொடர்ச்சியாக நடைபெற்று, அன்றைய அலுவல்கள் அனைத்தையும் நிறைவு செய்தது இங்கே குறிப்பிடத்தக்கது. இன்றும் பேரவை தொடர்ச்சியாக மாலை வரை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

3-6-2011 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றினார்கள்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் நடைபெற்ற மொத்த நாட்கள்	—	4
உரையாற்றிய உறுப்பினர்கள்	—	34 பேர்
உரையாற்றிய நேரம்	—	10 மணி 34 நிமிடம்
அதில் ஆளுங்கட்சியினர்	—	10 பேர்
பேசிய நேரம்	—	3 மணி 46 நிமிடம்
இதர கட்சியினர்	—	24 பேர்
பேசிய நேரம்	—	6 மணி 48 நிமிடம்
மாண்புமிகு முதலமைச்சர் பதிலுரை ஆற்றிய நேரம்	—	1 மணி 18 நிமிடம்

(மேசையைத் தட்டும் ஒலி)

2011 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

நிதி அலுவல்கள்—

4-8-2011 அன்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 3 மணி நேரம் நீண்ட உரையாற்றி, பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை உள்ளடக்கிய 2011-2012 ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு-செலவுத் திட்ட அறிக்கையைப் பேரவைக்கு அளித்தார்கள்.

வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள்	—	5
பங்கேற்ற உறுப்பினர்கள்	—	38
உரையாற்றிய நேரம்	—	13 மணி 45 நிமிடம்
அதில் ஆளுங்கட்சியினர்	—	12 பேர்
பேசிய நேரம்	—	4 மணி 10 நிமிடம்
இதர கட்சியினர்	—	26 பேர்
பேசிய நேரம்	—	9 மணி 35 நிமிடம்

இதர கட்சியினருக்குக் கூடுதலாக 5 மணி 25 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலளித்த நேரம்	—	48 நிமிடம்

மானியக் கோரிக்கைகள்

விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள்	—	19 நாட்கள்
விவாதித்து நிறைவேற்றப்பட்ட மானியக் கோரிக்கைகள்	—	54
உரையாற்றிய உறுப்பினர்கள்	—	177
உரையாற்றிய நேரம்	—	36 மணி 16 நிமிடம்

அதில் ஆளுங்கட்சியினர்	—	54 பேர்
பேசிய நேரம்	—	11 மணி 19 நிமிடம்
இதர கட்சியினர்	—	123 பேர்
பேசிய நேரம்	—	24 மணி 57 நிமிடம்

இதர கட்சியினருக்குக் கூடுதலாக 13 மணி 38 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது பொறுப்பில் உள்ள துறைகள் சம்பந்தமாக பதிலளித்த நேரம்	—	1 மணி 10 நிமிடம்

(மேசையைத் தட்டும் ஒலி)

தனது பொறுப்பிலுள்ள துறைகள் மட்டுமல்லாமல் இதர துறைகள் தொடர்பான விவாதங்களிலும் உறுப்பினர்களின் கருத்துகளுக்கு உடனுக்குடன் மாண்புமிகு முதலமைச்சர் விளக்கம் அளித்த நேர்வுகள்	—	38
பேசிய நேரம்		மொத்தம் 30 நிமிடம்

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையாற்றிய மொத்த நேரம்	—	26 மணி 27 நிமிடம்

மிகுந்த பெரும்பான்மை உறுப்பினர்களைப் பெற்றுள்ள ஆளுங்கட்சிக்கு கட்சி விகிதாச்சாரப்படி, விவாதத்தில் அதிக நேரம் கொடுக்க வேண்டுமென்றாலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரைப்படி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதிகமான அளவில், அதிக நேரம் உரையாற்ற வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் மொத்தம் 34 உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர். இதில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் 10 பேர்தான் உரையாற்றி இருக்கிறார்கள். 24 பேர் ஏனைய கட்சியைச் சேர்ந்தவர்கள்.

2011 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

அதேபோல ஆளுங்கட்சி உறுப்பினர்கள் நேரத்தைப்போல, கிட்டத்தட்ட 2 மடங்கு நேரம் ஏனைய கட்சி உறுப்பினர்கள் உரையாற்றியுள்ளார்கள். அதாவது, இதர கட்சியினருக்குக் கூடுதலாக 3 மணி 2 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையில் உரையாற்ற எந்த அளவிற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரையின்படி இந்த அவையில் ஜனநாயகம் எந்த அளவு தழைத்தோங்குகிறது என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 5-00

வெட்டுத் தீர்மானங்கள்:

வரப்பெற்றவை	—	2,621
அனுமதிக்கப்பெற்றவை	—	2,508
அவையில் முன்மொழியப்பெற்றவை	—	679

இந்த நேரத்தில் நான் ஒன்றை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். எந்த அளவிற்கு அம்மா அவர்கள் அவை நடவடிக்கைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்கள் என்பதற்கு இன்னும் ஓர் உதாரணம். நேற்றைக்கு வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிய உறுப்பினர் பெயர்களை நான் அழைக்கையில், உறுப்பினர் இருக்கையில் இல்லாத நிலையில் 'உறுப்பினர் இருக்கையில் இல்லை' என்று நான் குறிப்பிட வேண்டும். அவ்வாறு நான் குறிப்பிடாததைக் கவனித்த நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள், பேரவைத் தலைவர் 'இந்த உறுப்பினர் இருக்கையில் இல்லை' எனக் குறிப்பிடவில்லை எனச் சுட்டிக்காட்டினார். அந்த அளவிற்கு மிக ஆழமாக அவை நடவடிக்கைகளில் பங்கு கொண்டவர் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) உங்களோடு பகிர்ந்துகொள்வதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தப் பேரவை முறம்போல அறக் காரியங்களைச் செய்திருக்கின்றது. எப்படியென்றால், சல்லடை, குப்பையைத் தனக்குள் வைத்துக்கொண்டு நல்லதையெல்லாம் வெளியேற்றிவிடும். ஆனால் முறம் இருக்கிறதே, அது கழிவுகளையெல்லாம் வெளியே

தூக்கி வீசிவிட்டு, மக்கள் உண்பதற்கும், அவர்களுடைய உணவுக்கும் பயன்படுகின்ற நல்லவற்றைத் தனக்குள் வைத்துக்கொள்ளும். அதனால்தான் சொல்கிறேன், இந்த அவை, முறம்போல செயல்பட்டிருக்கிறது என்று. (மேசையைத் தட்டும் ஒலி)

வினாக்கள்—விடைகள்:

இப்பேரவை தொடங்கியது முதல் 13-9-2011 வரை உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள்	—	8,585
அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை	—	159
அனுமதிக்கப்பெற்றவை	—	8,585
உடுக்குறியிட்டவை	—	3,804
உடுக்குறியிடாதவை	—	2,823
குறுகிய கால வினா	—	26

அனுமதிக்கப்பெற்றவற்றில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்—

வ. எண்	உறுப்பினர் பெயர் / கட்சி	வினாக்களின் எண்ணிக்கை
1.	திரு. எஸ்.பி. முத்துக்குமரன், இந்திய கம்யூனிஸ்டு கட்சி	1,129
2.	திரு. ம. குணசேகரன், அ.இ.அ.தி.மு.க.	593
3.	திரு. சி. மைக்கேல் ராயப்பன், தே.மு.தி.க.	267
4.	திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, அ.இ.அ.தி.மு.க.	249
5.	திரு. கே. உலகநாதன், இந்திய கம்யூனிஸ்டு கட்சி	241

2011 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

உடுக்குறியிட்ட வினாக்கள்

அவையில் விடையளிக்கப்பட்டவை	—	106
குறுகிய கால வினா	—	1
மொத்த துணை வினாக்கள்	—	349

மாண்புமிகு உறுப்பினர்களில் கட்சி வேறுபாடின்றி முதன்முறை துணை வினா கேட்கும் உறுப்பினர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அனேகமாக கை உயர்த்திய அனைத்து உறுப்பினர்களுக்கும் துணை வினா கேட்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

முதல் கூட்டத் தொடரிலேயே 107 வினாக்களுக்கு அவையில் மாண்புமிகு அமைச்சர்கள் விடையளித்துள்ளது நாமெல்லாம் பெருமை கொள்ளத்தக்க ஒரு நிகழ்வாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, சட்டமன்ற வினாக்களுக்கு முழுமுதல் கவனம் செலுத்தி, உடனுக்குடன் வினாக்களுக்கான விடைகளை வழங்க வேண்டும் என்று நான் அனைத்து அரசுத் துறைச் செயலாளர்களையும் நேரில் அழைத்து அறிவுறுத்தியதையடுத்து, வினாக்களுக்கான விடைகள் விரைந்து பெறப்பட்டதால் இத்தனை வினாக்களை எடுத்துக்கொள்ள முடிந்தது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அவையில் அதிக அளவு வினாக்களுக்கு விடையளித்த அமைச்சர்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள் பின்வருமாறு:—

வ. எண்	அமைச்சர்	வினாக்களின் எண்ணிக்கை
1.	நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்	தலா 10
2.	மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்	தலா 7

3.	இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்	தலா 6
4.	வேளாண்மைத் துறை அமைச்சர் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்	தலா 5
5.	உயர் கல்வித் துறை அமைச்சர்	தலா 4

வினாக்கள்-விடைகள் எடுத்துக்கொள்ளப்பெற்ற மொத்த நாட்கள் — 13

வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள் — 7

நீட்டிக்கப்பட்ட மொத்த நேரம் — 49 நிமிடம்

உடுக்குறியிடாத வினாக்கள்—

அவைமுன் வைக்கப்பெற்றவை — 175

இந்த நேரத்தில் ஒன்றை நான் குறிப்பிட வேண்டியது மிக அவசியமென்று கருதுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வினாக்கள்-விடைகள் நேரத்தில் தவறாது கலந்துகொண்டு தனது பொறுப்பிலுள்ள துறைகள் தொடர்பாக விடையளித்தது மட்டுமல்லாமல், இதர அமைச்சர்களின் துறைகள் சம்பந்தமாகவும் 14 நேர்வுகளில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு உடனுக்குடன் விளக்கமும் அளித்து, பல வாக்குறுதிகளையும் (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கியுள்ளார்கள். பல்வேறு நிதி நெருக்கடிகள் காரணமாக சில நேரம் அமைச்சர்கள் "திட்டத்தை நிறைவேற்றும் நிலை இல்லை" என்று பதில் கூற நேர்ந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் குறுக்கிட்டு பல நேர்வுகளில் "திட்டம் நிறைவேற்றப்படும்" என ஆக்கபூர்வமான பதிலை வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, பள்ளிக் குழந்தைகளின் வசதிக்காக சாலை சீரமைப்பது குறித்த கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் பதிலில்

2011 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

குறுக்கிட்டு அச்சாலை அமைத்து போக்குவரத்து வசதி செய்யப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக பதிலளித்தார்கள்.

பிற்பகல் 5-05

இதிலிருந்து பள்ளிக் குழந்தைகள் குறித்த விஷயத்தில் தீவிர அக்கறை கொண்டுள்ளார்கள் என்பது புலனாகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஒரு திரைப்படப் பாடலைக் குறிப்பிட்டு அதை எண்ணி நினைவுபடுத்திப் பாட இயலாமல் போனபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடன் எழுந்து, அது "அவனுக்கென்ன தூங்கிவிட்டான், அகப்பட்டவன் நானல்லவா" (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பாடல் என்று கூறியது மட்டுமல்லாமல், அது "பெரிய இடத்துப் பெண்" என்ற படத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பாடிய பாடல் என்பதையும் தெரிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நினைவாற்றலுக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள் அவையில் பேசும்பொழுது "நேற்று இரவு நான் திருச்சியிலிருந்து புகை வண்டியிலே சென்னைக்கு வந்தேன்" என்று குறிப்பிட்டவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமயோஜிதத்துடன் "இந்தக் காலத்தில் ஏது புகை வண்டி? (சிரிப்பு) நம்முடைய மாண்புமிகு உறுப்பினருக்காகத் தனியாக ஒரு பழைய புகை வண்டியை திருச்சியிலிருந்து விட்டார்களா என்று தெரியவில்லை" என்று அம்மா அவர்கள் இந்த sense of humour என்று சொல்லக்கூடிய வகையில் குறிப்பிட்டார்கள். "இப்பொழுது எல்லாமே டீசல் எஞ்சின் தானே!" என்று மிகவும் நகைச்சுவையாக குறிப்பிட்ட நேர்வு அவரது கூர்ந்த கவனத்திற்கும், ஆற்றலுக்கும் மற்றும் ஓர் உதாரணமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

"கொடிய வன விலங்குகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவி அதிகரிக்கப்படுமா?" என்ற கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்குப் பிறகு, உடனே, "தற்போது நிதி உதவி

ரூ.1.50 இலட்சம்; அதை ரூ.3.00 இலட்சமாக்கி உள்ளோம்" என்று கூறியதோடு இல்லாமல், "நாய்க் கடி பாதிப்புக்கு நிதி உதவி உண்டா?" என்ற கேள்விக்கு "நாய் கொடிய வன விலங்கு அல்ல" என்றும், இக்கேள்வி "இத்துடன் தொடர்பற்றது" என்றும் விளக்கினார். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறப்புக் கவன ஈர்ப்பு—

அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொருட்கள் குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பு (Special Mention) என்ற வகையில் அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்றவை	—	8
மாண்புமிகு முதலமைச்சர் பதிலளித்தவை	—	3
உரையாற்றிய உறுப்பினர்கள்	—	25
எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம்	—	3 மணி

மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளுக்கு அம்மா அவர்கள் எவ்வாறு நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதற்கு ஓர் உதாரணம். பரமக்குடியில் 11-9-2011 அன்று நடைபெற்ற துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக மாவட்ட வருவாய் அலுவலரின் தலைமையில் விசாரணை மேற்கொள்ளப்படும் என முதலில் அறிவிக்கப்பட்டாலும்கூட, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அவையில் வைத்த வேண்டுகோளுக்கு மதிப்பளித்து, அவர்களது கோரிக்கையினை ஏற்று, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனே மனமுவந்து அவையில் அறிவித்தார்கள்.

தகவல் கோரல்—

தகவல் கோரல் என்ற முறையில் அவ்வப்போது முக்கியப் பிரச்சினைகள் அவையில் எழுப்ப அனுமதிக்கப்பட்ட நேர்வுகள்	—	10
மாண்புமிகு முதலமைச்சர் பதிலளித்தவை	—	3
உரையாற்றிய உறுப்பினர்கள்	—	18
எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம்	—	54 நிமிடங்கள்